ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

स्वातन्त्र्यं पितृमन्दिरे निवसतिः यात्रोत्सवे सङ्गतिः
गोष्ठीपूरुषसन्निधावनियमो वासो विदेशे तथा ।
संसर्गस्सह पुंश्चलीभिरसकृद्वृत्तेर्निजायाः क्षतिः
पत्युर्वार्धकमीप्सितप्रवचनं नाशस्य हेतुस्त्रियाः ॥

தன்னிஷ்டம் போலிருப்பது, பிதாவின் கிருகத்திலேயே வஸிப்பது, உத்ஸவங்களைப் பார்க்கவேண்டி கோஷ்டி சேருகிறது, புருஷர்களின் முன்னிலையில் கூட்டம்கூடிப் பேசுவது, தானிருக்கவேண்டியமுறை மாறியிருப்பது, தனக்கு பாத்தியமுள்ள ஒருமனிதருமில்லாத வேறுதேசத்தில் வஸிப்பது, ஸ்திரீகளுக் கியற்கையிலிருக்க வேண்டிய அச்சம், நாணம் கற்பு, இவைகளைவிட்டுத் தோன்றியவாறு நடக்கும் ஸ்திரீகளுடன் ஸ்நேகம் செய்து தன் நடைத்தையினின்றும் மாறுவது, தன்கணவன் வயதுசென்றவனெனக்கருதி, தன்னிஷ்டப்படி அவனை நிந்தித்துப் பேசுதல் இவைபோன்ற காரியங்களைஎந்தஸ்திரீசெய்கின்றாளோ, அந்த ஸ்திரீயின் க்ஷேமக்குறைவிற்கு அவைகள் காரணமாகின்றன.

உலகிலுள்ள மானிடர்களில் எவரும் தம்ஜாதி குலம் தன்மை இருக்கவேண்டியமுறை தமக்கேற்பட்டவிதி முதலியவைகளை நன்கு ஆலோசித்து அவ்விதம் நடக்கவேண்டும். பெண்ணுகப்பிறந்த ஓர் ஸ்திரீஜாதி தன்நிலைமையை அவசியம் கவனித்துத் தனக்குற்ற தர்மத்தைக் கைவிடாமல். சாஸ்திரங்களுக்கும் சான்றோர் ஆக்ஞைக்கும் பயந்து நடக்கவேண்டியது முக்கியம். அவ்விதமின்றி மிருகங்களைப்போல் விதிவிலக்குகளுக்குக் கட்டுப்படாமல் கண்டவிடங்களில் செல்வதும், கெட்டவர்களுடன் பழக்கமும், தன் புருஷனைத் தெய்வமாகப்பாவித்து மரியாதையாயிருக்கவேண்டுமென்பதை மறந்து கண்டபடி அவனைப் பரிஹஸிப்பதும், மிகவும் கெட்டகாரியம். இவ்விதமிருக்கும் ஸ்திரீகள் க்ஷேமக் குறைவை யடைந்து அதிக கஷ்டங்களுக் குள்ளாவார்கள். ஆகையால் எவ்விதசிரம மிருந்தாலும் தனக்குற்ற தர்மத்தைக் கைவிடாமலனுஷ்டித்தால் எப்பொழுதும் மேன்மையை யடையலாம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ரக்தாக்ஷி-ஸு மாசி-மீ க-உ

வேதாந்தஸாரம்.

वेदान्तशास्त्रविषयो यदि पत्रिकाया-
मस्यां हिताय स भवेत् पठतामिहेति ।
ज्ञात्वार्यधर्मनिरतैरुदितं वचस्तत
किंचित्तदिष्टपरिपूर्तिकृते लिखामि ॥

இப்பத்திரிகையில் தற்சமயம் வேதாந்த விஷயமும் வந்தால் படிப்போர்களுக்குப் பயனையளிக்குமென ஆர்யதர்மத்தில் ஆவல் கொண்ட சிலருடைய கருத்திற்கிணங்க அவ்விஷயத்தையும் அற்பம் வெளியிட முன்வருகிறேன். ஹிந்துக்களுக் கேற்பட்டிருக்கும் சகல சாஸ்திரங்களும் மனிதர்களின் க்ஷேமத்தைக் கருதியே வெளியிடப்பட்டிருக்கின்றனவென்பதைப் பலருமறிந்திருக்கலாம். அவைகளுள் சில பரம்பரையாக மோக்ஷத்திற்குக் காரணங்களாகின்றன. வேதாந்தமென வழங்கப்படும் நூல் மிகவும் சிறந்த பரம புருஷார்த்தமென்று கூறப்பட்ட மோக்ஷத்திற்கு ஸாதனமாகின்றது. மானிடர்களுக்கு அக்ஞானத்தால் நித்யமில்லாத ஸம்ஸாரத்தில் நித்யபுத்தியும், நீர்க்குமிழிபோல் நிமிஷங்கூட நிற்காமல் அடியோடு நாசத்தையடையக் கூடியதும், துக்கத்திற்குக் காரணமுமான விஷயஸுகத்தைப் பேரானந்தமாகவும், கருதி ஏற்படும்பற்றுதலை அவைகளின் உண்மையான ஸ்வரூபத்தைப் பல திருஷ்டாந்தங்களால் போதித்து அவைகளிலுள்ள பற்றுதலை அறவே விலக்கி நித்யாபரோக்ஷானந்த ரூபமான ஆன்மஸ்வரூபத்தின் நிலைமையை நன்கு ஸ்பஷ்டமாய் நிரூபித்து ஸச்சிதானந்தமயமான

அந்தப்பரம் பொருளைப் பெறுவதற்குற்ற ஸாதனங்களையும் அந்தந்த அதிகாரிக்குத் தக்கவாறு முறையே விளக்கிக்காட்டி நம் போன்றவர்களை வெகுகாலமாய் ஹிம்ஸிக்கும் ஸம்ஸாரமென்னும் கடலிலிருந்தும் கரையேற்றி உத்தமசுகத்தைப் பெறும்படி செய்யச் சிறந்த கருவியாயிருப்பது வேதாந்த சாஸ்திரமே. இச்சிறந்த சாஸ்திரத்தை ஸத்குரு கருணையால் நன்கறிந்துபவப் பிணியையகற்றுவதே இப்பிறவிக்குற்ற பயனென்றும், அஃதில்லாவிடில் இப்பிறவி வீணாகுமென்கிற இக்கருத்தையே கற்றாரொருவருமடியில் வருமாறு கூறுகிறார்.

लब्ध्वा सुदुर्लभतरं नरजन्म जन्तुः
तत्रापि पौरुषमतः सदसद्विवेकम् ।
संप्राप्यचैहिकसुखाभिरतो यदि स्यात
धिक्तस्य जन्म कुमतेः पुरुषाधमस्य ॥

பிராணியானது அரிதிலுமரிதான இம்மானிடப்பிறவியைப் பெற்றும் அதிலும் விசேஷ மஹிமைவாய்ந்த புருஷஜன்மாவையுமடைந்து. அதிலும் இது நல்லது, இது கெட்டது, பாபம், புண்யம் முதலான நன்கு பகுத்தறியும் சக்திவாய்ந்த சிறந்த ஞானத்தையும் பெற்று இல்லறசுகத்தில் விருப்பத்துடனிருப்பானாகில் புருஷர்களுக்குள் கீழ்ப்பட்டவனாயும் கெட்ட புத்தியை யுடையவனுமாகிய அவனைச் சுடு என்று நிந்திக்கிறார். மாந்தராய்த் தோன்றிய அறிவுள்ள புமான்கள் இவ்வுலகவாழ்க்கையைப் பெரிதாய்க் கொள்ளாமல் நித்யானந்தரூபமான ஆன்மஸ்வரூபத்தையடைய வேண்டியதற் குற்ற ஸாதனங்களையறிவிக்கும் வேதாந்த சாஸ்திரங்களைப் பயின்று அதில் கூறியவாறு அனுஷ்டிக்க வேண்டியதே முக்கிய மென்றெண்ணி அந்நூலை மிகவும் மேதாவிகளான அநேகம் பண்டிதசிரோமணிகள் வடமொழியில விஸ்தாரமாய் வெளியிட்டிருந்தாலும் அவர்களுக்குள் ஸ்ரீ ஸதாநந்தர் என்கிறவோர்மஹானால் எல்லாஜனங்களும்சுலபமாயறிந்து அதன் பயனையடையவேண்டி சுருக்கமாய் வேதாந்த ஸாரமென்கிற பெயரு

டன் வடமொழியிலியற்றப்பட்ட மிகவும் சிறந்தநூலை லோக க்ஷேமத்தைக்கருதி அற்ப அறிவுடைய நான் என்சிற்றறிவிற் கெட்டியவரை தென்மொழியில் மொழிபெயர்த்து, அதை நற் காரியமென்றுகற்றோர்களும்கருதுவார்களென்றுணர்ந்து, நம் ஆர்ய தர்மத்தின் வாயிலாக தைர்யமாய் வெளியிட முன்வருகிறேன்.

வேதாந்த சப்தார்த்த நிரூபணம்.

வேதாந்தம் என்று பலபேர்களாலும் பிரஸித்தமாய்க் கூறப் படும் பதத்தின் பொருள்யாது என்பதை முந்திவிசாரிக்க வேண் டியது முக்கியமாகையால் அதை விசாரிப்போம்.

வேதாந்தம் என்றால் உபநிஷத் பிரமாணம் என்று பொருள். வேதங்களுடைய அந்தம். முடிவான உபநிஷத்துக்கள் அதா வது ஆத்மஸ்வரூபத்தை யறிவிக்கும் உபநிஷத் ரூபங்களான பிர மாணங்களுக்கு வேதாந்தமென்று பெயர்.

வேறு பொருளுமுண்டு. உபநிஷத் சப்தத்திற்கு ஆத்ம ஞானமென்று பொருள். உப-நி-என்கிற இரண்டு பதங்களுக்கு மேல்உச்சரிக்கப்படும் ஸதி-தாதுவுக்கு (Root) ஆன்மஞானமென்று கடோபநிஷத்தில் ஸ்ரீ சங்கரபாஷ்யத்திலும் வெளியிடப்பட்டிருக் கின்றது. அவ்விதாத்ம ஞானத்திற்குப் பிரமாணம். காரணமா யிருப்பது வேதாந்தம் என்றும் கூறலாம்.

तदनुसारीणि शारीरकसूत्राणि च ।

பின்னும் **तदनुसारीणि**- உபநிடதங்களின் பொருளை யனு ஸரித்து ஆன்மஸ்வரூபத்தை நிரூபிக்கின்றவைகளும் **शारीरकसूत्राणि** சரீரத்தினுள்ளிருக்கும் ஜீவனுடைய நிலைமையைப் பற்றி விசாரம் செய்கின்றனவுமான ஸ்ரீ வியாஸபகவானு லியற்றப்பட்ட நான்கு அத்தியாயங்களுடன் கூடிய சூத்திரங்களும வேதாந்த மென்ற பெயரால் வியவகரிக்கப்படுகின்றன. இதனால் வேதாந்த மென்றால் அனுதியாய் விளங்கும் சுருதிகளுக்கு முடிவில் பிரகா சித்துக் கொண்டிருப்பதும் ஆத்மஸ்வரூபத்தை நேரினும் பரம்

பரையாகவு மறிவிக்கும் திறமை பொருந்தியவையுமான உபநிஷத்துகளுக்கும் இவைகளின் கருத்திற்கிணங்க பரமாத்மரூபத்தையும் ஜீவனுடைய சகல விஷயங்களையும் நன்கு போதிக்கும் வியாஸரால் எழுதப்பட்ட ஸூத்திரங்களுக்கும் முக்கியமான பொருளென்றேற்படுகின்றது. மற்றும் இவைகளின் கருத்தையனுஸரித்து எழுதப்பட்டிருக்கும் கிரந்தங்களுக்கும் கௌணமாக இப்பெயரை வழங்குவதுமுண்டு.

ஆர்யதர்மம்உபபத்திராதிபர்

இந்திய ஜோதிட பண்டிதர்களும் அவர்களின் அரிய நூல் க ளும்.

மு ன் னு ரை .

[ஜோதிட சாஸ்திர வரலாறு]

ஸித்தாந்தம், ஹோரை, ஸம்ஹிதை என்ற மூன்று கிளை [ஸ்கந்தம்] களோடு விளங்கும் [வேதத்தின்] கண்ணாகிய ஜோதிடக்கலையானது, 18 ஆசாரியர்களால் ‘இவ்வுலகம் நன்மையடையும் வழியை வெளியிட்டுக்கொண்டு பிரகாசிக்கின்றது, என்ற உண்மையை பெரியோர் வாயிலாக எவரும் உணர்ந்திருப்பர். உண்மையான அறிவுபெற்று மனிதவர்க்கம் மேன்மைபெறும் வழியை எளிதில் புகட்டும் ஜோதிடக்கலையை விரிவு செய்த அப்பெரியார்களின் பெயர்களாவன:—

सूर्यः पितामहो व्यासो वसिष्ठोऽत्रिः पराशरः ।
कश्यपो नारदो गर्गो मरीचिर्मनुरंगिराः ॥
लोमशः पौलिशश्चैव च्यवनो यवनो भृगुः ।
शौनकोऽष्टादशाश्चैते ज्योतिःशास्त्रप्रवर्तकाः ॥

ஸூர்யன், ப்ரஹ்மா, வ்யாஸர், வஸிஷ்டர், அத்ரி, பராசரர், கச்யபர், நாரதர், கர்க்கர், மரீசி, மநு, அங்கிரஸ், லோமசர்,

பௌலிசர், ச்யவநர், யவநர், ப்ருகு, சௌநகர், இந்த 18 பேர்களும் ஜோதிட சாஸ்திர ப்ரவர்த்தகர் என்பது கச்யபர்வாக்கு.

पुलस्त्यो मनुराचार्यः पौलिशः शौनकोऽङ्गिराः ।

என்ற வாக்யத்தால் புலஸ்த்யரையும் இந்த கோஷ்டியில் சேர்த்து 19 பேராக கணிக்கவேண்டும் என்றார் பராசரர். வேறு சிலர் பராசரர் தெரிவித்த வாக்யத்தின் முதல் பதமாகிய **पुलस्त्य** புலஸ்த்ய என்ற சொல்லை இரண்டாவது பதமாகிய **मनु**—மநு என்ற பதத்திற்கு விசேஷணமாக [அடைமொழியாக] க் கருதுகின்றனர். நாரதரோவெனில், ஸூர்யனைத்தவிர்த்து 17 ஆசார்யர்களையே தம்முடைய ஸம்ஹிதையில் கணக்கிடுகின்றார்.

ब्रह्माचार्यो वासिष्ठोऽत्रिः என்று தொடங்கியுள்ள இந்த நாரத ஸம்ஹிதாவசனத்தை **ब्रह्मसूर्यौ वसिष्ठोऽत्रिः** என்று வேறோர் பாடமாக வழங்குவதும் வித்வந்மண்டலத்தில் காணப்படுகின்றது. இதை ஸரி என்று அங்கீகரித்தால் ஜ்யோதிச் சாஸ்திரத்திற்கு ஜீவனாக விளங்கும ஸூர்யனை நாரதர் மறைக்கவில்லை என்ற முடிவு கிடைக்கும்.

இந்த ஸம்ஹிதாக்காரர் பதினெண்மரும்

कालज्ञानं प्रवक्ष्यामि लगदस्य महात्मनः ।

என்று வேதாங்க ஜோதிடத்தில் புகழப்பட்ட மஹாத்மாலகதரை பற்றி பேசவேயில்லை.

पञ्चवर्षयुगवर्णनं செய்கின்றதும், வேதாங்கத்தின் மூலரூபமாயுமிருக்கின்ற ஜ்யோதிஷாசார்யரான லகதமாஹாத்மாவைக் குறித்துத் தனியே ஆராய்தல் வேண்டும் போலும்!

ஸூர்யபகவான், மயன் அருணன் என்பவர்களுக்காகவும், ப்ரஹ்மதேவர் நாரதரின்பொருட்டும், வ்யாஸர் தமது மாணக்கருக்காகவும், வஸிஷ்டர் மாண்டவ்யர் வாமதேவர்களின் பொருட்டும், பராசரர் மைத்ரேயருக்காகவும், ஜோதிட நூல்களைச் செய்தருளினர். அதுபோலவே புலஸ்த்யாசாரியர், கர்க்கர், அத்ரி முதலிய மஹான்களும் தம் தம் சீடர்களின் நிமித்தம் ஜோதிஷகலா

விஸ்தாரஞ் செய்தனர் என்பது மிகையாகாது. இந்த அபிப்பிராயத்தைப் பராசரரே விளக்குகின்றார்:—

नारदाय यथा ब्रह्मा शौनकाय सुजाकरः ।
माण्डव्यवामदेवाभ्यां वसिष्ठो यत्पुरातनम् ॥
नारायणो वसिष्ठाय रामेशायापिचोक्तवान् ।
व्यासः शिष्याय सूर्योऽपि मयारुणकृते स्फुटम् ॥
पुलस्त्याचार्यगर्गोऽत्रिरोमकादिभिरीरितम् ।
विवस्वता महर्षीणां स्वयमेव युगे युगे ॥
मैत्रेयाय मयाप्युक्तं गुह्यमध्यात्मसंज्ञकम् ।
शास्त्रमाद्यं तदेवेदं लोके यच्चातिदुर्लभम् ॥

முன்னர் 18 ஆசார்யர்களையும் விவரித்து வந்த பராசரர் **लोमशो यवनः सूर्यः** என்ற வசனத்தால் லோமசரைக் குறிப்பிடுகின்றாரல்லவா அங்குள்ள லோமச என்ற சொல்லை ரோமக **'रोमक'** என்று கொள்ளலாமென்றும், இவ்விரு பெயர்களும் ஒருவரைக் குறிக்கும் சொற்களென்றும் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ ஸுதாகரத்விவேதியார் கூறுகின்றார்.

இந்த அபிப்பிராயத்தை அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு விட்டு விடுகின்றேன்.

இனி, இந்த ஆசார்யபுருஷர்களின் காலம் முதலியவற்றையும் சரித்திரக் குறிப்புகளையும் அவரவர் செய்துள்ள நூல்களைக் கொண்டே அறியவேண்டியிருக்கின்றது. அவர்களின் ஸித்தாந்த நூல்களில்லாவிடில் நாம் அவர்களின் சரிதையை அறிதல் கடினமாகவே முடியும்.

ஆகவே, ஜ்யோதிஷ [சாஸ்திர] நூலாசிரியர்களின் காலம் முதலியவற்றையும், அவர்கள் முறையே ஒருவரையொருவர் பின்பற்றிச் செய்துள்ள [அல்லது ஒருவர் கொள்கையை மறுத்து மற்றொருவர் விசேஷமாகச் செய்துள்ள ஸித்தாந்த] முடிவு நூல்

களின் பேர்களையும் எனக்குக் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு ஆர்யவித்யைகளுக்குப் புத்துயிரளிப்பதில் அமுதம் போன்று கிடைத்துள்ள ஆர்யதர்மத்தில் எழுதிவர விரும்புகின்றேன். இந்த முறையில் அறிஞர்களின் ஆதரவு எனக்கு பக்கபலமாக நின்று உதவிபுரியவும் அன்போடு வேண்டுகின்றேன்.

ஸ்ரீ பதி:

இவர் ஸ்ரீ பதிபட்டர் என்ற பெயராலும் அழைக்கப் படுகின்றார். இவரது காலம் சாலிவாஹநசகம் 921. இவர் அக்காலத்தில் விளங்கிவந்த ஜோதிட பண்டிதர்களுள் சிரோரத்நமென்றே போற்றப்பட்டவர். மூன்று ஸ்கந்தத்திலும் இவரது புலமை ஒப்புவமையற்று விளங்கியது. இவர் 'ஜாதகசாஸ்திரத்தில் தமது பெயரால் ஸ்ரீபதி பத்ததி, என்ற நூலையும், முஹூர்த்த சாஸ்திரத்தில் 'ரத்நாவளி' 'ரத்நஸாரம்' 'ரத்நமாலை' என்ற மூன்று நூல்களையும் செய்திருப்பதாக மாத்திரம் சிலர் கருதுகின்றனராயினும், ஸ்ரீ பதிக்குப் பிற்காலத்தில் விளங்கிய பல நூலாசிரியர்களால் இவர் வேறுபல நூல்கள் செய்திருப்பதாகவும் மேற்கோள்கள் எடுத்து விளக்கப்படுகின்றன.

உதாரணமாக: சாலிவாஹநசகம் 1525-ல் விளங்கிய முநீசுவரபண்டிதர், ஸ்ரீ பாஸ்கராசாரியரின் லீலாவதிக்கு டீகா செய்யும் பொழுது

दोः कोटिभाग रहिताभिहताः खनाग-
चन्द्रास्तदीयचरणो न शरार्कदिग्भिः ।
ते व्यासखण्डगुणिता विहृताः फलन्तु
ज्याभिर्विनापि भवतो भुजकोटिजीवे ॥

என்ற சுலோகத்தினால் ஸ்ரீபதி செய்துள்ள பாடீகணித கிரந்தத்தையும்,

भुजसमासदलं हि चतुःस्थितं
निजभुजैः क्रमश पृथगूनितम् ।

अथ परस्परमेव तदा हतेः
कृतपदं त्रिचतुर्भुजयोः फलम् ॥

என்ற ப்ரமாண வசனத்தால் ஸ்ரீ பதியின் பீஜகணித நூலையும் குறிப்பிடுகின்றார். இவைகளல்லாமல், சந்த்ர ஸூர்யக்ரஹண ஸாதநரூபமான धीकोटिकरणं என்ற நூலும் ஸ்ரீ பதியினால 100 சுலோக உதாரணமடங்கியதாகச் செய்யப்பட்டுள்ளதென்றும் அது தம்மிடமிருப்பதாகவும் ஸுதாகர துவிவேதியார் எழுதுகின்றார்.

இவையாவற்றினும் மேலாகக் கொண்டு போற்றத்தக்க "ஸித்தாந்த சேகரம்" என்ற நூலொன்று இந்த மஹானால் செய்யப்பட்டிருப்பதாய் அறிகின்றோம். ஜ்யோதிஷ சாஸ்திரத்திற்கு 'சிரோமணி' யெனத் தகும் அந்த நூல் இழந்தமைபற்றி தாம் மிகவருந்துவதாக 'கணகதரங்கிணியில' த்விவேதியர் கூறுகின்றார்.

இவர் சிறிதும் "வித்யாகர்வம் அற்றவர்" என்றும், ஸஜ்ஜனர்களால் பெரிதுங் கொண்டாடத்தக்க பாண்டித்யம் வாய்ந்தவரென்றும், காவ்யஸாஹித்யாதிகளில் பரம நிபுணரென்றும், அழகும இனிமையும் பொருந்திய வாக்விலாஸ ஸம்பத்தை அதிகமாகப் பெற்ற ரஸிகஸார்வ பௌமரென்றும் இவரது 'ரத்நமாலையை"ப் பார்வையிடுவோர் எளிதில் மதிப்பர்.

திருஷ்டாந்தமாக:

भ्रातरद्यतनविप्रनिर्मितं शास्त्रमेतदिति मा वृथा त्यज ।
आगमोऽयमृषिभाषितोपमो नापरं किमपि भाषितं मया ॥ (रत्नमालांते)

'ஸஹோதர! இந்த சாஸ்த்ரம் இப்பொழுதுண்டான ப்ராஹ்மணரால் செய்யப் பெற்றதுதானே!' எனக்கருதி, வீணே உதறிவிடாதே; இது ஆகமம் வேதம் என்று கருதுவாயாக. மஹரிஷிகளால் தெரிவிக்கப் பெற்ற சாஸ்திரங்களுக்கு நிகராகவே இதனை உணர்ந்து கொள்க. (வேதங்களின் தாற்பர்யத்திற்கு மாறுபாடாக வேனும், அல்லது முனிவர்களின் கருத்திற்கு முரணாகவேனும்

கருதுதற்குரிய) வேறு எவ்வித கருத்தும்—ஒருசிறிதும்—என்னுல் கூறப்படவில்லை உலகத்திலுள்ள ரஸிக சிரோமணிகளை நோக்கி "हे भ्रातः— ஸஹோதர!" என்கிற இனிய மொழிவழங்கி ஸம்போதனஞ் செய்யும் ஸ்ரீபதியினது அமுதவாக்யத்தில் அடங்கிக் கிடக்கின்ற அன்பின் த்வனியை உண்மையாகவே சுவைத்து நோக்கும் பேரறிவாளர்களின் ஹ்ருதயம் பேரானந்தத்தில் மூழ்கி, அவரது வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கு மென்பதில் தடையுமுண்டோ? வெண்கலத்தைக் கையினுல் தட்டி ஓசை பார்ப்பதுபோல், கவிதையின் ரஸத்வனியை மனத்தினுல் சுவைத்துப் பார்க்கும் ஒரு போஜன்போன்ற வதாந்ய அரசன் ஸ்ரீபதியின் வாக்விலாஸ ரஸததில் மோஹித்தவனுகி இந்த சுலோகத்திற்கு அக்ஷரலக்ஷம அள்ளிக் கொடுப்பானென்பது திண்ணம்! இதைப் படிக்கும் தருணத்தில்

पुराणमित्येव न साधु सर्वं न चापि काव्यं नवमित्यवद्यम् ।
सन्तः परीक्ष्यान्यतरद्भजन्ते मूढः परप्रत्ययनेयबुद्धिः ॥

என்ற கவிகுலதிலக காளிதாஸப் பெருமானின் ஸமஹ்ருதயப் பிரார்த்தனை நினைவிற்குவருதல் உசிதமாம்.

தமக்குப் பிற்காலத்தில் தோன்றும் மனிதர்கள் சாஸ்திரங்களின் கௌரவத்தை உள்ளவாறு உணர்ந்து நலம் பெறுவதில் ச்ரத்தையைச் செலுத்த வேண்டு மென்றே ஸ்ரீபதியார் வித்வந்,மண்டலத்தைக்கூவி இந்தப் பிரார்த்தனையை வெளியிட்டார்போலும்! ஆஹா; அவரது பாண்டித்தியத்தின் பெருமை என்னே! என்னே!! "नम्रत्वेन उन्नमन्तः—सन्तः" என்று பர்த்ருஹரி மஹாகவி தெரிவித்தவாறு இப்பெரியாரும், தமது பணிவினுல் அளவிடற் கரிய பெருமைக்கு உறைவிடமாக விளங்குகின்றுர். அவரது நூல்களை நாம் படித்து நலம்பெறுதலே நாம் அவர்க்குச் செய்யும் உதவியும் நன்றியுமாகும். சுபம்

ச. வேங்கட்டராமசாஸ்திரி.
காணப்பேட்டை

ஏன் நாம் வேதகாவ்யம் கற்கவேண்டும்?

जन्तूनां नरजन्मदुर्लभं என்று ஜகதாசாரியாள் சொன்னபடி ''அரிது அரிது (என்ன?) மானிடராதல் அரிது, என் நமது சாஸ்திர ஸித்தாந்தத்தின்படியும் தற்காலத்திய ஆராய்ச்சியின் முடிவின் படியும் மானிடவடிவம் பூர்ணமான ஸ்ருஷ்டி என்பது வெளிப்படையானது. பகுத்தறிவு பெற்றமையாலும் ஏனைய கலைகளைக் கற்பதற்கேற்ற ஆற்றலுடைமையாலும் மானிடன் மேலானவனென்பதை மறுப்பாரில்லை, எல்லாம் கலையாயினும் இம்மையில் இன்பத்தை ஈட்டி மறுமையிலும் மாசற்ற ஸுகத்தைக் கொடுப்பதே கல்வி என நிச்சயமாய்க் கூறலாம். அக்கல்வி வேதமென்பதைத் தவிர வேறில்லை. உலகிலுள்ள ஒவ்வொருமதமும் ஒவ்வோர் வேதத்தையுடையது, இன்று தோன்றி நாளை அழியும மதங்களைப் பற்றி யாம் சொல்லவில்லை. அந்தந்த மதத்தினர் அவரவர் வேதத்தை அகிலத்தை அல்லது அதில் ஒரு பாகத்தை அல்லது அணுவேனும் அத்யயனம் செய்யவேண்டு மென்பது மதக்கடமையாகும். குரானைமுற்றிலுமோ குறைந்தது ஏகதேசத்தையோ ஓதாத முகம்மதியனைக் காண்பதரிது. அங்ஙனமே பைபிளைப்படியாத கிருஸ்தவனைப் பார்ப்பது துர்லபம். அவ்வாறே வேதத்தை அல்லது வேதத்திலோர் பாகத்தையாவது அத்யயனம் செய்யாத அந்தணன் அரிதெனக்கூற நாவெழவில்லை. ஏன்? கலியின் தாண்டவம்! நாகரிகத்தின் நர்த்தனம்! ஆங்கிலத்தின் ஆக்ஷி!! இதை விவரிக்கின் ஏனவரைப்போல் நாமும் நம்மையே நிந்திப்பதாகும். இதையறிந்தே முக்காலத்தையு முணர்ந்த முனிவர்கள் வேதஸர்வஸ்வஸாரமான காயத்திரியையாவது ஜபிக்கட்டுமென [முறையே 4 வேதம் கற்காவிடினும் ஸ்வவேதமாவது அதிலும் அசக்தர் ஓர் சாகையையாவது அதிலும் அசக்தன் உபயுக்தமான பாகங்களையாவது கற்கட்டுமெனச் சொல்லி] தர்ம நூல்களில் கூறுகின்றனர். இதையாவது சிரத்தையுடன் தப்பில்லாமல்லகத்திணைபோர்

செய்கின்றனர் என்ற கேள்விக்கு ஸர்வேச்வரனே பதிலுரைக்க வேண்டும். 3 தலைமுறை வேதமோதாதவர் அந்தியவர்ணத்தைச் சார்ந்தவரென மனு கூறுகிறார். தனித்தனியே அவரவர் அனுஷ்டிக்கத்தக்க ஸந்தியை ஜபம் ஒருவாறு சொல்லத்தகாத நிலையிலிருக்க, விவாகம், உபநயனம், கர்ப்பாதானம், ஸீமந்தம், சிரார்த்தம் முதலிய பிதுருகர்மாக்கள், நாம மாத்திரத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றன. இக்குற்றத்தை யஜமானனிடமா அல்லது உபாத்யாயரிடமா செலுத்துவது, ? கலிஸார்வ பௌமனது கடும் ஆக்ஷியாலும் மந்திர த்ருஷ்டர்களான மகரிஷிகளின் பீஜப்ராபவம் குறையவில்லை. மந்திரசக்தி மழுங்கவில்லை என்பது பிரஸித்தம், அதேபோல் மந்திரத்தைச் சரிவர உச்சரிக்காவிடில் கேடு விளையும் என்பது சொல்லாமலே விளங்கும். ஓர் சுருதி உதாஹரணத்துடன் நாம் சொன்ன கருத்தை விளக்கிக்காட்டுகிறது. எழுத்திலோ ஸ்வரத்திலோ தவரிய மந்திரம் வீணுவதோடு இந்திர சத்துருவைப்போல் யஜமானனையே கெடுக்கும் என்றால் தப்புடன் செய்வதைவிட செய்யாமலே விடுவது நலமெனக் கூறும் சோம்பேரி வேதாந்தத்திற்கு இடமளிக்குமோ என நினைக்கலாம். ஒவ்வொருவனும் ஸ்வகர்மத்தைச் செய்யத் தான்வேண்டும், தப்பில்லாமலேதான் செய்ய வேண்டும், ஒப்புக்காகவாவதுஊர்மெய்க்கவாவது நாம் செய்யும் அனுஷ்டானங்களில் குற்றங்குறைகளேற்படுவதால்தான் நமது ஸமூகம் பலதுறையில் கீழ்நோக்கிச் செல்வதுடன் நிந்தைக்கு ஆளாகிறது. நமது நித்ய நைமித்திக காம்ய கர்மாக்களில் ஓதப்படுவது வேதமந்திரம், அல்லது தத்துல்யமான புராணச்லோகங்களாகும் ஸத்ஸம்ஸ்கார மின்மையால் நமது சிறுவர்கள் வாக்குமிக மிகக் கேவலமாயிருக்கிறது, ஆங்கிலானுஸாரியாக கீர்வாணம் கற்கும் குழந்தைகள் முறையே क ख ग घ இவைகளை முதல் இரண்டு மூன்று நான்காவது 'க' வென்றே சொல்லக் கேட்டிருக்கிறேன் அந்தோ! பிராமணப்பிள்ளைகளும் இந்த கதிக்காளானார்களா என்று நினைக்க எந்த ஆஸ்திகன் ஹிருதயம்தான்

உருகாது? பரலோகத்துப் பேச்சு ஓர்புரமிருக்கட்டும், இஹலோகத்தில் நாம் நோயின்றி தாரித்ரியமின்றி ஸுகமாக ஜீவிக்க வேண்டுமானால் நாமனுஷ்டிக்கும் கர்மமந்திரங்கள் சுத்தமாயிருத்தல் வேண்டும், அதற்கென்செய்வது? उदरनिमित्तं बहुकृतवेषः என்றபடி வயிற்றைவளர்க்க என்னதொழில்·செய்தாலும எக்கல்வி கற்றாலும் சிறிதளவாவது வேதகாவ்யம் கற்கவேண்டும். பண்டிதர்களையும் உதரபாதை விட்டபாடில்லை. ஆயினும் ஒழிந்தவேளையில் தான்கற்றதை பலனை எதிர் நோக்காது தன்கடமையெனப் பண்டிதர் மற்றோருக்குக் கற்பிக்க முன் வரவேண்டும். லௌகிகர் என்போரும் தன் க்ஷேமத்திற்காகவாவது இதை கற்றல் வேண்டும். இதைக்கருதியே சென்னை அமரகலாவிலாஸினீ ஸபையார் சென்னை ஸபாமண்டபத்தில் ஸ்ரீ ஸுப்ராமசாஸ்திரிகளையும் மாம்பலம் யக்ஞவிலாஸத்தில் அடியேனையும் பல்லாவரத்தில் தாலூக்காபோர்ட் தலைவர் ஸ்ரீ செங்கல்வராவ் வீட்டில் ஸ்ரீ வெங்கடேசதீக்ஷிதரையும் வாலாஜாபாத் ஹிந்துமத பாடசாலையில் ஸ்ரீ-வே-மகாதேவசர்மாவையும் திருவண்ணாமலை ஸன்னதிவீதியில் ஸ்ரீ வாமதேவசாஸ்திரிகளையும் சிதம்பரத்தில் அநந்தேசுவர ஸ்வாமிகோவில்தெரு 14. நெ. வீட்டில் வெங்கிடராம தீக்ஷிதரையும் வேதகாவ்ய பாடம் சொல்லவேண்டிக்கொண்டிருக்கின்றனர். ஆங்காங்கு இதேபோல் வைதிக லௌகிகர்கள் ஒன்று சேர்ந்து ஆத்மலாபத்தை யடையுமபடி வேண்டுகிறேன்.

ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மா
மஹோபாத்யாயர் M.H.ஸ்கூல் சென்னை
அமரகலாவிலாஸினீ ஸபா.

கலியின் கொடுமையும், காக்கும்வழியும்.

நண்பரீர், அருமை நண்பரீர், யாண்டும்
குறையொருங் ககற்றி நிறைபதம் பெறுவான்

முயலுதல் செய்யும் நயமிகு நண்பரீர்,
கேளீர் கலியின் கொடுமையைக் கிளத்துவன்.
அறம்புக லின்றித் துறவுமேற் கொண்டே
சென்றிடும். தவமோ கன்றியீண் டில்லா
தோடியே போகும். கூடிய வாய்மையோ
பறந்துபோம். பூமி சுரந்திடா தொழியும்.
மாந்தரோ நாளும் போந்துணை யறியார்
வஞ்சகக் கொள்கல மாகித் துஞ்சுவர்

✱ ✱ ✱ ✱ ✱ ✱
✱ ✱ ✱ ✱ ✱ ✱

தந்தையைத் தநயரோ நிந்தனை செய்தழி
வழக்குத் தொடுத்துப் பழித்தவ மதிப்பர்.
இன்னும் பலபல இன்னலும உண்டாம.
ஆதலின் இவையொரீஇ மேதகு பதமே
விரும்பிடி விறைவன் பெரும்புகழ் பேசுமின்,
சிரமேற் கொண்டவன் திருவடி மலரைப்
போற்றுமின். இவையே ஏற்றன.
சாற்றினேன். உள்ளத் தேற்றுவாழ் வீரே.

இஃது ஒரு வடமொழிச் செய்யுளின் கருத்தைத் தழுவி எழுதப்பட்டது. இதன் பொருள் ,,நண்பரே, எனது அரிய நண்பரே, எந்நாளும் குற்றங்களை முற்றும் நீக்கி நிறைந்த பெரும் பதத்தைப்பெற முயலுகின்ற நன்மைமிகுந்த நண்பரே, கலியின் கொடுமையைச் சொல்லுவேன் கேளும். தர்மமோ தங்க இடமின்றிச் சந்நியாசம் பெற்றுவிலகும். தபசோ வருந்தி இங்கே இல்லாது ஓடிப்போகும். நிலைத்தசத்தியமோ பறந்துபோய் விடும். பூமியோ போதுமான விளைபொருள்களைத் தராது வீணாகும். மனிதர்களோ எந்நாளும் ஆத்மார்த்தமான துறைகளை அறியாராகி வஞ்சகஸ்தானமாகி அழிவார்கள். ✱

✻ பிள்ளைகளோ தந்தைமாரைப் பழித்துரைசெய்து அழிவழக்குத் தொடுத்து அவமதிப்பார்கள். இவ்வளவுதானோ? இன்னும் பற்பல துன்பங்களும் உண்டாகும். ஆதலினால், இத்தொல்லைகளினின்றும் நீங்கி அந்தமேலானபரமபதத்தை அடைய விரும்புவீராயின் முழுமுதற் கடவுளது நிறைந்த கல்யாண குணங்களையாலளைப் பாடுவீராக, அவனது தாமரைப்போன்ற திருவடிகளைத் வணங்குவீராக. இவையே அதற்குஏற்றவை சொன்னேன். இவற்றை உமது உள்ளத்திற் பதியவைத்து இனிதுவாழ்வீராக.'' என்பது

தண்டமிழ்த்தொண்டன்.

வித்வந்மண்டலவேலை.

சென்னை மயிலாப்பூரில் ஒரு வித்வந் மண்டலம் இருப்பதாக அறிகின்றேன். அதுபோன்ற மண்டலம் செய்யத்தக்க வேலைகள் பலவும் நம் நாட்டில் சுமந்து கிடக்கின்றன. உதாரணமாக மண்டலத்தைச் சார்ந்த பண்டிதர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு புராணம் வீதம் பங்கு போட்டுக் கொண்டு மொழிபெயர்த்தால் தேசத்திற்கு எவ்வளவு உபகாரங் கிடைக்கும்? மோக்டொனல் முதலிய மேனாட்டுப் பிரமுகர்கள் 4 'வேதசாரங்கள்' என்ற புத்தகங்களை வெளியிட்டு நமது வித்யார்த்திகளின உள்ளத்தை மாற்றும் பொழுது, நமது உண்மையான 'மததத்வத்தை வெளியிடக் கூடியவாறு, நான்கு வேதசாரங்களைத் திரட்டி வெளியிட்டு அவற்றை 'சிரோமணி M. A. முதலிய வகுப்புகளுக்குப் பாட புத்தகமாக வைத்தால் நலமன்றோ'

குறைவானதுதான்.

பண்டிதஸ்ரீ துர்காப்ரஸாதர் என்ற கனவான் अष्टादशपुराणदर्पण பதினெண் புராணக் கண்ணாடி என்னும் நூலொன்றை வெளியிட்டுள்ளார். 18 புராணங்களுக்கும் அதயாயவிபரம் மாத்

திரம் அதில் காணப்படுகின்றதன்றி, புராணங்களின் முழுக்கருத்தும் அக்கண்ணாடியில் காணவில்லை. ஆகவே, அவர் செய்தவேலை போதியதன்று.

வேதசாஸ்திர பரிபாலனஸபை.

இந்த உத்தேசத்தில் சென்னையிலே ஒருஸபை நடைபெற்றுப் பல வருஷங்களுக்குமுன் நின்று விட்டது! அதனை மீண்டும் உயிர்ப்பித்தல் ஆர்யதர்மோத் தாரணத்திற்குச் சிறந்த உதவியாகும். இத்தருணத்தில் சென்னைவர்ணாச்ரமஸபை மீண்டும் தோன்ற வேண்டும்.

மதப்ரசார தந்த்ரம்!

கல்கத்தாவில் கிறிஸ்தவ மதப்ரசார உத்தேசத்தோடு ‘எபிபெனி,’ என்ற ஆங்கிலப் பத்திரிகையொன்றுதர்மமாக நடைபெறுகின்றதென ஒரு வ்யாஸத்தில் குறிப்பிட்டேன். சென்னையில் நடைபெறுகின்ற ‘தாருல் இஸ்லாம்’ என்ற மகமதிய மாதாநதப் பத்திரிகை அதுபோல் இப்பொழுது ஒருபுதிய முறையைக் கொண்டுள்ளது. மகமதியர்க்கு வருடசந்தா 3-0-0. மகமதியரல்லாதார்க்கு வருடசந்தா 2-0-0, இதன் கருத்தென்ன? இதரமதத்தினரும் தமது மதக்கருத்தை யுணர்ந்து பின்பற்ற வேண்டும் என்பதில்லையா!

திருநெல்வேலிஜில்லா பாளையங்கோட்டையில் ’வாலிபர் நேசன்’ என்ற கிறிஸ்தவப் பத்திரிகையொன்று சொற்ப சந்தாவில் நடைபெறுகின்றது. திருச்சியிலும் அதுபோன்ற பத்திரிகை பிறந்திருக்கிறது. தமது மதப்ரசார விஷயமாய் இதர மதத்தினர் இடைவிடாது செய்யும் முயற்சிகளை இவையளந்து காட்டும் பொழுது நாம் செய்ய வேண்டியவேலை தற்காப்பிற் கேனும் போதியதாக இருக்க வேண்டாமா?

ஜாநகீஜாநி:.